**நில ஆர்ஜித வழக்குகள் சிறப்பு சார்பு நீதிமன்றம் அரக்கோணம்**

அ.வ.எண் . 121 /2019

Deposition of Witness : PW. 1 Jeyanthi D

இந்நீதிமன்ற நிலை 2 உதவியாளர் திரு. கண்ணன் அவர்களால் சத்திய பிரமாணம் செயவிக்கப்பட்டு வாதி தரப்பு சாட்சி 1ன் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2021 ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் நாளில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை தாவா சொத்தை திரும்ப கேட்டு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் 13/1. பி அட்டவணை சொத்தின் விஸ்தீரணம் 25 X 32 10 X 20 15 X 20. ஏ அட்டவணை சொத்தின் விஸ்தீரணம் கிழக்கு மேற்கு 37 வடக்கு தெற்கு 122 அடி. வழக்கில் தாவா சொத்தின் செக்பந்தி விவரம் குறிப்பிட்டுள்ளேன். நான் செக்பந்தி விவரங்களை வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 13/1 ஆதியில் முணியம்மாள் மற்றும் கோவிந்தம்மாள் ஆகியோருக்கு பாதியப்பட்டது. சர்வே எண் 13/1 ன் நான்கு பக்க எல்லைகள் தெரியாது. வாசாஆ 1ல் சொல்லியுள்ள செக்பந்தி விவரம் சரியானதுதான். வாசாஆ 2 ன் விவரம் எனக்கு தெரியும். வாசாஆ 2 ன் மூலம் 37.5 X 122 அடி கிரயம் கொடுத்துள்ளார்கள். வாசாஆ2 ல் சர்வே எண் குறிப்பிட்டுள்ளார்கள். வாசாஆ 2 ல் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 2 ல் குறிப்பிட்டுள்ள செக்பந்தி விவரம் எனக்கு தெியாது. செக்பந்தி விரம் தெரியாமல் தான் நான் வாசாஆ 2 யை தாக்கல் செய்துள்ளதால் அது செல்லாது என்றால் சரியல்ல. வாசாஆ3 37.5 X 122 அடி கிரயம் கொடுத்துள்ளார்கள் அதன் சர்வே எண் 13/ 1. சர்வே எண் 13/1 பூரா விஸ்தீரணம் 75 X 122 அடி. வாசாஆ 3 ன் செக்பந்தி விவரம் எனக்கு தெரியாது. வாசாஆ3 ல் உள்ள செக்பந்தி விவரம் சரியானதுதான்.

**குறுக்கு விசாரணை தொர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**